# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1796/40 - 2013 පෙබරවාරි මස 08 වැනි සිකුරාදා - 2013.02.08

*1796/40 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்**

பிரிவு 4 (2) இன் கீழான பிரசுரித்தல்

இலங்கை பட்டயக்கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன்பின்னர் "நிறுவகம்" எனப்படும்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக SLFRS 7 - நிதிச்சாதனங்கள் : வெளிக்காட்டல்கள் எனும் நியமம் 2011, திசெம்பர் 7 புதன்கிழமை திகதியிட்ட 1735/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலும் பின்னர் இந்த நியமத்திற்கான மாற்றங்கள் 2011, திசெம்பர் 30 வெள்ளிக்கிழமை திகதியிட்ட 1738/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டன.

நிறுவகம் இந்த நியமத்தின் "அமுலுக்கு வரும் திகதி மற்றும் இடைக்கால ஏற்பாடுகள்" பிரிவுக்கு கீழே தரப்பட்டுள்ள பந்தியை (பந்தி 44 ஆக) சேர்க்க தீர்மானித்துள்ளது.

"பந்தி 44

உரிமமொன்று இந்த SLFRS இனை 2013, சனவரி 1 ஆந் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்குமேயாகில், அது நிதிக்கூற்றுக்களினால் ஏற்படும் இடர்களின் தன்மை மற்றும் அளவு பற்றி பந்திகள் 31 - 42 இனால் தேவைப்படுத்தும் வெளிக்காட்டல்களுக்கு ஒப்பீட்டுத் தகவல்களை வழங்கவேண்டிய அவசியம் இல்லை."

பேரவையின் கட்டளைப்படி,

அருண அல்விஸ்,
செயலாளர்.

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல. 30 A, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2013, சனவரி 31.

*2 - 808*